8

# கிறிஸ்துவின் நிறைவு குறித்த பவுலின் படம், 1

## (2:8, 9)

நிருபத்தின் துவக்கத்தில் கொலோசெயர்களை வாழ்த்தின பிறகு பவுல் இயேசுவின் மாபெரும் சிறப்புத்தன்மையையும் அவர் மூலமாய் அவர்கள் பெற்ற ஆவிக்குரிய சுத்திகரிப்பையும் சொன்னார். பவுல் இயேசுவுக்கு செய்த ஊழியம் அவர்களுடைய நன்மைக்காகவே என்பதையும் குறிப்பிட்டு அவர்களை உற்சாகப்படுத்த முயன்றார். ஞானம் அறிவு ஆகிய சகல ஐசுவரியமும் கிறிஸ்துவுக்குள் இருக்கிறபடியால், மற்ற போதகர்களை அவர்கள் பின்பற்றிப் போவது குறித்து எச்சரித்தார்.

இந்த வகையான பின்னணியை பொருளாகக் கொடுத்து அதன் மீது கட்ட ஏதுவாக்கிய பவுல், இயேசுவின் முக்கியத்துவம் குறித்து பவுல் வலியுறுத்தத் துவங்குகிறார். கொலோசெயர்கள் அவருக்குள் தேறினவர்களாயிருந்தார்கள், ஏனெனில் அவர் மூலமாக பாவம் நிறைந்த கடந்தகாலம் அப்புறப்படுத்தப்பட்டது. அவர்கள் ஆவிக்குரிய முறையில் மரித்திருந்தார்கள் ஆனால் இப்பொழுதோ அவர்கள் பிழைத்திருப்பவர்களாகவும் பாவங்கள் மன்னிக்கப்பட்டவர்களாகவும் இருக்கிறார்கள், ஏனெனில் அவர்கள் பெற்ற ஞானஸ்நானத்திலே இயேசுவின் மரணம் அடக்கம் உயிர்த்தெழுதலை பகிர்ந்து கொண்டார்கள். அவர்களுடைய புதிய வாழ்க்கையை அவரே கட்டுப்படுத்தக் கூடியவராக இருந்தார்; அவர்களுடைய மீறுதல்களை மன்னித்து அவர்களுக்கு எதிரிடையாக இருந்த பிரமாணத்தையும் எடுத்துப் போட்டதால், அவர்கள் அவருக்குக் கீழ்ப்படிந்திருக்க வேண்டும். அவர்கள் நியாயப்பிரமாணத்தின் கட்டளைகளை பின்பற்ற வேண்டுவதில்லை, அதைத்தான் அதை நடுவிலிராதபடிக்கு எடுத்துப்போட்டார்; அவர்கள் உலக வழிபாடுகளுக்கும் கீழ்ப்படியவேண்டிய அவசியமில்லை, அவைகளில் ஆவிக்குரிய பெருக்கத்திற்கு உதவ எதுவுமில்லை.

### மனித உபதேசங்களால் அவர்கள் கொள்ளையாகிய போகாதபடி எச்சரிக்கை (2:8)

**[8]லெளகீக ஞானத்தினாலும், மாயமான தந்திரத்தினாலும், ஒருவனும் உங்களைக் கொள்ளைகொண்டுபோகாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; அது மனுஷர்களின் பாரம்பரிய நியாயத்தையும் உலக வழிபாடுகளையும் பற்றினதேயல்லாமல் கிறிஸ்துவைப் பற்றினதல்ல.**

***“லௌகீக ஞானத்தினாலும் மாயமான தந்திரத்தினாலும், ஒருவனும் உங்களை கொள்ளைகொண்டுபோகாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்” (2:8)***

*கெலோசெயர்கள் தங்களுடைய விசுவாசத்தை இயேசு என்னும் உறுதியான அஸ்திபாரத்தின் மேல் கட்டியிருக்கிறார்கள் என்று வசனம் 6ல் உறுதிப்படுத்தின பின்பு, பவுல் தொடர்ந்து அவர்களை எச்சரித்து தங்களை வேற்று உபதேசங்களுக்கு யாரும் வழிநடத்தாதபடி பார்த்துக் கொள்ளச் சொன்னார். எச்சரிக்கை “யாயிருங்கள்” என்பது* ***“பாருங்கள் …”*** *என மூலபாஷையில் (blepete, நேரடிப்பொருளில், “பார்”) எழுதப்பட்டுள்ளது,*[1] *அதன் மூலம் எதிர்ப்புக் கொடியை பவுல் தூக்கிப்பிடித்தார். வழிதவறிச் செல்லச் செய்யும் ஆபத்தும் கொள்ளை கொண்டுப் போகப்பட ஏதுவான கவர்ச்சிகரமான உபதேசமும் உண்மையில் இருந்தது.*

***ஒருவனும்*** *என்பது குறிப்பிடப்பட்டுள்ளதன் கிரேக்க வார்த்தை mētis, என்பது ஒரு குறிப்பிட்ட பெயர்குறிக்கப்படாத நபரையோ நபர்களையோ சுட்டிக் காட்டுவது. அநேக சம்பவங்களின் போது “சிலர்” என்ற வார்த்தை இதற்கு ஒப்பிட்டு* KJV *மொழிபெயர்ப்பில் கூறப்படுகிறது (உதாரணம் மத்தேயு 9:3). ஒருவகையில், பவுலுக்கு இது தெரிந்திருக்கலாம், அல்லது அவருக்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கலாம், அந்த சில போதகர்கள் கொலோசெய சமுதாயத்தில் இருந்து கொண்டு உள்ளூர் சபை அங்கத்தினர்களை சத்தியத்தை விட்டு விலகிச் செல்லவும் உலக ஞானத்தின் மூலமாக போதிக்கப்படுகிறவைகளைப் பின்பற்றவும் அவர்களை இணங்கச் செய்யமுற்பட்டார்கள்.*

***கொள்ளைகொண்டுபோகப்படுதல்*** *(sulagōgeō) என்பதன் பொருள் ஒரு கைதியை கூட்டிபோதல். இந்த கிரேக்க வார்த்தை இங்கு மட்டுமே காணப்படுகிறது. இதன் பிரதான பொருள் “கொள்ளையாடிய பொருளை கொண்டுபோக ஏதுவான கட்டுப்பாட்டைக் கொண்டிருத்தல், அடிமைப்படுத்திக் கொள்ளுதல், கொள்ளை … யாரோ ஒருவரை சத்தியத்தி (லிருந்து) அப்புறப்படுத்தி தவறானவைகளின் அடிமைத்தனத்துக்கு உட்படுத்துவது”*[2] *என்று பொருள். இந்த வார்த்தையைக் குறித்து* A. T. Robertson *சொன்னதாவது: “இந்த வினைச்சொல் இங்கு மட்டுமே மிக அபூர்வமாக, மற்றும் பின்னதான எழுத்தாளர்களால் பயன்படுத்தப்பட்டுள்ளது.* Heliodorus *என்பவர் ஒருவனுடைய மகளை கொள்ளை கொண்டு போவதை (கடத்திச் செல்லுவதை) ஒப்பிட்டு இந்த வார்த்தையை பயன்படுத்துகிறார்;* Aristaenetus, *என்பவர், ஒரு வீட்டை கொள்ளையிடுவதை ஒப்பிடுகிறார்;* Nicetas, *ஒரு பெண்ணைமானபங்கப்படுத்துவதை ஒப்பிடுகிறார்.”*[3]

*கொலோசெயர்கள் இருளின் அதிகாரமாகிய அடிமைத்தனத்திலிருந்து விடுதலையானவர்கள் (1:13), அது பாவ இருளிலிருந்து கிடைத்த விடுதலை. பவுல் அவர்களிடம் மறுபடியும் அடிமைத்தனத்துக்கு உட்படத்தக்கதாக கொள்ளை போய்விடாதீர்கள் என்று பவுல் சொன்னார். அவர்கள் மீண்டுமாக தங்களுடைய முந்தின வழிகளில் செல்ல ஏதுவாக மோசம் போவதையோ நூதனமான தவறுகளால் பிடிபட்டுப் போவதையோ பவுல் விரும்பவில்லை. இயேசுவிடமிருந்து அவர்களை பிரிக்க ஏதுவாக கள்ளப் போதகர்கள் தங்களை வஞ்சியாதபடிக்கு அவர்களை தவிர்க்க இவர்கள்*

(கொலோசெயர்) எப்பொழுதும் எச்சரிக்கையாயிருக்க வேண்டும்.

பவுல் அவர்களை **"ஞானத்தில் விருப்பம்" லௌகீக ஞானத்திற்கு** எதிராக (தத்துவம் - *philosophia*) எச்சரித்தார், இந்த கிரேக்க வார்த்தை புதிய ஏற்பாட்டில் இங்கு மட்டுமே காணப்படுகிறது. தத்துவங்கள் (ஞானம்) எப்பொழுதும் தவறானவை என்பதாக பவுல் சொல்லவில்லை. கிரேக்கர்களுக்குள், இந்த வார்த்தை மனிதனுடைய சிறப்பான புத்திக் கூர்மைக்கான பிரயாசங்கள் உண்மையைக் கண்டறிவதிலும் அல்லது ஞான விருப்பத்தால் ஞானத்தை அடையவும் முயற்சிக்கும் செயலைக் குறிக்கிறது. முதலாவதாக அது உயர்குணப் பொருளில் பயன்படுத்தப்பட்டது. தங்களை ஞானிகள் என்று சொல்லிக் கொண்டு பெருமையாகப் பேசித்திரிவதற்குப் பதிலாக ஞானத்தை முழுமையாய் அடைந்துவிட்டதைப் போல, கிரேக்கர்கள் தங்களை ஞான விரும்பிகள் என்று அழைத்துக் கொண்டார்கள்.

அலெக்ஸாந்திரியாவைச் சேர்ந்த கிளமெண்ட் போன்ற ஆதி எழுத்தாளர்கள் உடனடி தர்க்கத்தில் இறங்கி பவுல் எல்லா தத்துவங்களையும் கண்டனம் பண்ணவில்லை என்றனர்.[4] ஃபிலோ உண்மையான தத்துவத்தைப் புகழ்ந்தார், ஆகிலும் தங்களுடைய வாக்கு வல்லமையால் சத்தியத்தை குறைத்து மதிப்பிட்டவர்களை மறுதலித்தார்.[5]

தீமோத்தேயுவுக்கு பவுல் எழுதும் போது, சீர்கேடான வீண் பேச்சுக்களுக்கும், ஞானமென்று பொய்யாய் பேர் பெற்றிருக்கிற கொள்கையின் விபரீதங்களுக்கும் எச்சரித்தார் (1 தீமோத்தேயு 6:20). கொலோசெயர்கள் மனித ஞானத்தை அடிப்படையாகக் கொண்ட போதனைகளை பின்பற்றுவதைக் காட்டிலும் கிறிஸ்துவின் ஞானத்துக்கு செவிகொடுக்கும்படி அவர்களை ஊக்கப்படுத்தினார். அவர் பொதுவான தத்துவங்களை கண்டிக்கவில்லை, மாறாக கிறிஸ்துவின் போதனைகளுக்கு முரணாண தத்துவங்களையே சாடினார். அந்நாட்களிலிருந்த தத்துவங்கள், அஞ்ஞான மற்றும் யூதக்கல்லுரிகளில் போதிக்கப்பட்ட தத்துவங்கள், தேவனைக்குறித்தும் உலகத் கண்ணோட்டத்தையும் குறித்த கோட்பாடுகளாக இருந்தன, அவைகளில் பெரும்பாலானவைகள் கிறிஸ்தவ போதனைகளுக்கு முரணாக அமைந்திருந்தன, தத்துவஞானிகளெல்லாம் விசுவாசத்துக்கு அழிவைக் கொடுக்கும் தத்துவக்கருத்துக்களையே முன் வைத்தனர்.

எப்பிக்கூரர்களும் ஸ்தோயிக்கரும் ஆகிய "தர்க்க சாஸ்திரிகள்" அத்தேனே பட்டணத்தின் சந்தை வெளியில் ஏரியோபேக்கஸ் (மார்ஸ் மேடையில்) பவுலுடன் தர்க்கம் செய்து எதிர் கொண்டனர் (நடபடிகள் 17:18, 19). இந்த மனுஷர்கள் தங்கள் சிந்தனைகளை மனுஷ பகுத்தறிவின் மீது வைத்திருந்தார்களேயொழிய தெய்வீக வெளிப்பாட்டின் மீது வைக்கவில்லை.

### "மாயமான தந்திரம்" (2:8)

இங்கே "தத்துவம்" என்பது **மாயமான தந்திரத்தோடு**[6] (*kenēapatē*). நெருங்கின தொடர்பு உடையதாயிருக்கிறது. கிரேக்க மொழியில், தத்துவம் *philosophia* மற்றும் *apatē* என்பவை ஒரே ஒரு துணை வாசக சொல்லை மட்டுமே தொடர்ந்து வந்தன. அவை முன்னிடைச் சொல்லையும் தொடர்ந்து வரவில்லை. எனவே மேற்குறித்த சொற்றொடர் "மனிதனுடைய சுய கண்டுபிடிப்பில் வந்த பிரயோஜனமற்ற யூகத்தின் அடிப்படையிலான

தத்துவம்” என்றோ அல்லது “மாயமான தந்திரத்திலான தத்துவம்” என்றோ மொழிபெயர்க்கலாம்.

பவுல் தப்பாக வழி நடத்தும் அறிவாளிகளின் யூகங்களை கண்டனம் பண்ணினார், அவை வஞ்சிக்கிறவைகளும் மதிப்பற்றவைகளும் தப்பான அதே நேரத்தில் கவர்ச்சிக்கும் மனித பகுத்தறிவின் மேல் கட்டப்பட்டவை. அப்படிப்பட்ட தத்துவங்கள் சத்தியத்தையும், உள்ளான வல்லமையையும், நம்பிக்கையையும், ஆவிக்குரிய வாழ்க்கையையும் வெறுமையாக்க முயற்சிக்கின்றன, அதன் பயன்பாடு வெறுமையான, இயல்பில் அழிவுள்ள தன்மையை மறைத்து கவர்ச்சியாய்த் தோன்றும். எனவே பவுல் சகோதர்களை எச்சரித்து உண்மையான ஞானத்திலிருந்தும் கிறிஸ்துவிலுள்ள ஜீவனிலிருந்தும் வழுவாதபடி எழுதினார்.

தத்துவ ஞானிகள், தங்கள் ஞானத்தைக் தேடுகிற காரியத்தில், மனிதனுடைய பகுத்தறிவை மட்டுமே சார்ந்திருந்தார்களே யொழிய, தெய்வீக வெளிப்பாட்டை சார்ந்திருக்கவில்லை. அப்படிப்பட்ட அணுகுமுறைக்கு பவுல் விளக்கமளித்தார்; “எப்படியெனில், தேவ ஞானத்துக்கேற்றபடி உலகமானது சுய ஞானத்துக்கேற்றபடி உலகமானது சுய ஞானத்தை அறிந்திருக்கையில், பைத்தியமாய்த் தோன்றுகிற பிரசங்கத்தினாலே விசுவாசிகளை இரட்சிக்க தேவனுக்குப் பிரியமாயிற்று” (1 கொரிந்தியர் 1:21). கள்ளப் போதகர்கள் சத்தியத்தை கலப்படமாக்கி கெடுத்து ஜனங்களை வழிதவறிப்போகச் செய்கின்றனர். தவறுகள் கவர்ச்சிக்கிற உண்மைகளை போதியளவுக்கு கொண்டிருக்கும், ஆனால் அதன் தவறுகள் அவைகளால் மூடப்பட்டிருக்கும். சில கள்ளப்போதனைகள் போதிய தவறுகளைக் கொண்டு ஆபத்தானவைகளாகவும் ஆக்கினைக்குள்ளாக்குகிறவைகளுமாயிருக்கும்.

இயேசு சத்தியத்தைக் கொடுத்தார் (யோவான் 1:17), அது அப்போஸ்தலர்களிடம் கொடுக்கப்பட்டு, பின்பு பரிசுத்த ஆவியால் சகல சத்தியத்திற்குள்ளாகவும் நடத்தப்பட்டனர் (யோவான் 16:13). யூகங்களுடனான தத்துவங்களினூடே இயேசுவின் போதனைகளை அணுகுவதற்குப் பதிலாக, கிறிஸ்தவர்கள் தாழ்மையுடன் அதே வேளையில் மிகுந்த மரியாதையுடன் வசனத்தை அணுக வேண்டும். நேர்மையாய் தேவனுடைய செய்தியை புரிந்து கொள்ள முயற்சிக்கும் போது, நாம் எந்த முழு உண்மையை அறியாத தப்பெண்ணங்களிலிருந்தும் விடுபட முயற்சிக்க வேண்டும். மனித சிந்தனைகளை வசனத்திலிருந்து படிக்க முற்படுவதைக் காட்டிலும், தேவனுடைய ஞானத்தை நாம் தேட வேண்டும்.

### “மனுஷருடைய பாரம்பரிய ஞானம்” (2:8)

**பாரம்பரியம்** (*paradosis*) என்பது காலங்களினூடே “கொடுக்கப்பட்டவை,” அதாவது “போதனைகளாலும் கைக்கொள்ளுதல் மூலமாகவும்” வந்தவை, ஒரு பாரம்பரியம் நல்லதாகவோ கெட்டதாகவோ இருக்கலாம். ஒரு உபதேசம் தேவனிடத்திலிருந்து ஒரு ஏவப்பட்ட போதகர் மூலமாக கொடுக்கப்பட்டால் அது நல்லது; இருப்பினும், ஒரு போதனைக்கு ஒரு மனித மூல காரணி எனில், அது தவறாக (கெட்டதாக) இருக்கக்கூடும். தேவனுடைய போதனைக்கு முரணாக அமைந்திருக்கிற ஏதுவுமே புறந்தள்ளப்பட வேண்டியவை.

1 கொரிந்தியர் 11:2ல் கொரிந்தியர்கள் தான் ஒப்புவித்த கட்டளைகளை

(பாரம்பரியத்தை) கைக் கொண்டு வருவதற்காக பவுல் அவர்களைப் புகழ்ந்தார் தெசலோனிக்கேயருக்கு அவர் அறிவுறுத்தி முறைமைகளைக் கைக்கொள்ளாதிருக்கிற எந்த சகோதரனையும் விட்டுவிலகும்படி சொன்னார் (2 தெசலோனிக்கேயர் 3:6), மேலும் அவர் அவர்களுக்குப் போதித்த முறைமைகளை ஜாக்கிரதையாய் கைக்கொள்ளவும் அறிவுறுத்தினார் (2 தெசலோனிக்கேயர் 2:15), இவைகளெல்லாம் நல்ல பாரம்பரியங்கள், ஏனெனில் அவைகள் தேவனிடத்திலிருந்து வந்தவை.

தவிர்க்கப்பட வேண்டிய பாரம்பரியங்களில் யூதருடைய பாரம்பரியம், அஞ்ஞானிகள், மற்றெந்த மனுஷருடைய பாரம்பரியமும் தேவனுடைய முறைமைகளுக்கு (பாரம்பரியங்களுக்கு) முரணாக இருந்தாலும் இவைகளைளெல்லாம் உட்பட்டவை. யூதர்கள் தங்கள் முன்னோர்களுடைய பாரம்பரியங்களை மீறி நடப்பதாக இயேசுவை கடிந்து கொண்டார்கள். அவர்களுக்கு பதிலளித்த அவர் அவர்கள் தங்கள் பாரம்பரியத்தினால் தேவனுடைய கற்பனைகளை அவமாக்கிப் போட்டார்கள் என்றும் மீறி நடக்கிறார்கள் என்றும் சொன்னார் (மத்தேயு 15:2-6; மாற்கு 7:3-13). தேவனைத் தொழுதுகொள்ளுகின்ற விஷயத்தில் மனிதக் கற்பனைகள் எல்லாம் வீணானவைகள் (மாற்கு 7:7). யூதருடைய பாரம்பரியத்தை கைக் கொள்ளுவதில் பவுல் வைராக்கியமாயிருந்தார் (கலாத்தியர் 1:14). பேதுரு முன்னோர்களுடைய பாரம்பரியத்தை ரோம உலகின் கிழக்கு மண்டலம் முழுவதும் சிதறியிருந்தவர்களை குறிப்பிட்டு எழுதினார் (1 பேதுரு 1:1, 18). இந்தப் பாரம்பரியங்களெல்லாம் ஜனங்களை தேவனிடத்தில் சரியானவர்களாக்காது.

பவுல் கொலோசெயருக்குக் கொடுத்த எச்சரிக்கையெல்லாம் கிறிஸ்துவிடமிருந்து மனிதப்பாரம்பரியத்தினால் கொள்ளை கொண்டு போகப் படாதிருக்க வேண்டும் என்பதுதான். இயேசு தமது சீஷர்களுக்குக் கட்டளையிட்டு சொன்ன யாவற்றையும் அவர்கள் ஞானஸ்நானம் பெறுபவர்கள் கைக்கொள்ளும்படி போதிக்க வேண்டும் எனக் கற்பித்தார் (மத்தேயு 28:20). வேறே எந்தக் கற்பனைகளும் போதனைகளும் மனுஷனிடத்திலிருந்து வந்தவையேயொழிய கிறிஸ்துவினிடத்திலிருந்து வந்தவையல்ல. அப்படிப்பட்ட கட்டளைகளை புறந்தள்ள வேண்டியதிருந்தது (தீத்து 1:14).

பிரதான ஆசாரியர்களும் வேதபாரகர்களும் இயேசுவிடத்தில் ஒரு முக்கியமான கேள்வியைக் கேட்டனர்: “நீர் எந்த அதிகாரத்தினால் இவைகளைச செய்கிறீர்? இந்த அதிகாரத்தை உமக்குக் கொடுத்தவர் யார்?”; பதிலுரையாக, இயேசு யோவானின் ஞானஸ்நானம் “... தேவனால் உண்டாயிற்றே? மனுஷரால் உண்டாயிற்றோ?” என்று கேட்டார் (மத்தேயு 21:25). இயேசுவின் சித்தத்தைத் தீர்மானிக்க, ஒரு பழக்கத்தைப் பற்றி மூன்று கேள்விகள் கேட்க வேண்டும்: “எந்த அதிகாரத்தினால் நாம் இதைச் செய்கிறோம்”; “இதைச் செய்ய யார் இந்த அதிகாரத்தைக் கொடுத்தது?”; மற்றும் “பரலோகத்திலிருந்தா அல்லது மனுஷரிடமிருந்தா?”

இயேசுவின் போதனை கண்டிப்பானது; மார்க்க ஆசாரங்களெல்லாம் அவருடைய கட்டளைகளுக்குள் உட்படுத்தப்பட வேண்டும். மனுஷரிடத்திலிருந்து வரும் பாரம்பரியங்களுக்குப் பதிலாக,

கிறிஸ்தவர்கள் இயேசு போதித்தவைகளை மட்டுமே கைக் கொண்டு வேறே உபதேசங்களை விட்டுவிட வேண்டும் (1 தீமோத்தேயு 1:3; 6:3, 4). வேறொரு சுவிசேஷத்தைப் போதிக்கிறவர்கள் சபிக்கப்பட்டவர்கள் (கலாத்தியர் 1:7, 8). இயேசு ஒரு தெரிவு செய்து கொள்ளுதலை வைக்கும் போது, கிறிஸ்தவர்கள் அதைக் கனப்படுத்த வேண்டும். இயேசு குறிப்பாக தெரிவு செய்தலைக் குறிப்பிடாத பட்சத்தில் மட்டுமே நாம் தெரிவு செய்து கொள்ளும் சுதந்தரத்தைப் பெற்றிருக்கிறோம்.

**"உலக வழிபாடுகளைப் பற்றினது" (2:8)**

பவுல் **உலக வழிபாடுகளைப்** பற்றியும் (*stoicheia tou kosmou*), ஒரு எச்சரிக்கை ஒலியை எழுப்பினார், அதாவது, கிறிஸ்தவரல்லாத கொள்கைகள் உலக மக்களால் அமைக்கப்படுபவை, இந்த சொற்றொடரைக் குறித்து ஒரு முரண்பட்ட கருத்து எழும்பியுள்ளது, அது வசனம் 20லும் கலாத்தியர் 4:3, 9 ஆகிய வசனங்களில் காணும் சொற்றொடருக்கு ஒப்பானது. உலக வழிபாடு என்பது ஒரே வார்த்தையாக சொல்லப்படுகிறது, அது வினைச்சொல்லாகிய *stoicheia*. புதிய ஏற்பாட்டின் மற்ற வசனங்களில் இந்தப்பதம் இரண்டு வழிகளில் பயன்டுத்தப்பட்டுள்ளது: கிறிஸ்தவத்தின் மூல உபதேசங்கள் (எபிரெயர் 5:12) மற்றும் பருப்பொருளை உண்டாக்கும் கருப்பொருட்கள் (2 பேதுரு 3:10, 12). இந்த வார்த்கைளின் பொருள், அடிப்படையாய் இருக்கிற எதுவும் உதாரணமாக, அகர வரிசையில் வரும் மூலக்கூறு எழுத்துக்கள் போன்றவை.

"உலகத்தின் வழிபாடுகள்" பற்றி நான்கு ஆலோசனைகள் சொல்லப்படுவதுண்டு. (1) இப்பிரபஞ்சத்தின் அடிப்படைக் கூறுகளான பொல்லாங்கான சக்திகளை பவுல் குறிப்பிடுகிறார், அவை பேய்களும் பொல்லாத ஆவிகளும் போன்றவை, அல்லது இப்பிரபஞ்சத்தைக் கட்டுப்படுத்துகிற தேவ தூதர்கள்.[7] (2) விண்ணுலக சரீரங்கள் மனித காரியங்களில் ஆட்கொள்ளும் தன்மையை அவர் பொருள்படுத்தினார். கிரேக்கர்கள் ஆவிகளை கட்டுப்படுத்த அக்கினி, காற்று, பூமி, நீர் ஆகியவைகளுடன் தொடர்பு கொண்டிருந்தனர். அவர்கள் பிரபஞ்சத்தின் இந்த நான்கு மூலக்கூறுகளின் ஆவிகளைத் தொழுது கொண்டனர், கூடவே நட்சத்திரங்களையும் தொழுதனர். (3) பவுல் பிரபஞ்சத் தோற்றம் குறித்தும் ஜீவனத்தின் பொருளைக்குறித்தும் கிறிஸ்தரல்லாத சிந்தனையாளர்களின் உலகக் கண்ணோட்டத்தைக் குறிப்பிட்டார். (4) ஆவிக்குரிய உள்நோக்குக் காரியங்கள் ஜனங்களுக்குள்ளே பெருகியதனிமித்தம் வீணாக்கப்பட்டதை மனதில் கொண்டு மூல காரியங்கள் மற்றும் கட்டுப்படுத்தும் சட்டங்களைக் குறித்துப் பேசினார். யூதர்களாலும் புறஜாதிகளாலும் கண்டுபிடிக்கப்பட்ட சட்டங்களுக்கும் விதிகளுக்கும் கீழ்ப்படிதல் தேவனிடத்திலிருந்து ஆசீர்வாதங்களை அளிக்கிறது என்று நம்பப்படுகிறது.

மேற்குறித்த நான்கு ஆலோசனைகளின் பொருளில் நான்காவது தான் மிகவும் பாராட்டத்தக்கது. "உலக வழிபாடுகளின்" என்று பவுல் குறிப்பிட்டதன் பொருள் அநேகமாக உலக ஞானத்தால் கட்டப்பட்ட அடிப்படைப் போதனையே யொழிய தேவனுடைய வெளிப்பாடல்ல (1 கொரிந்தியர் 1:20, 21). வசனப் பகுதியின் தொடர்ந்து வரும் வசனத்தில்

*உடனடி அர்த்தம் கொடுக்கப்படாததால். இந்தச் சொற்றொடரின் பொருள் பின்வரும் வசனங்களில் காணக்கூடும், அவை கொலோசெயர் 2:14, 16, 18, 21-23. இந்த வசனங்களில் பவுல் நியாயப்பிரமாணத்தைக் குறித்தும் அதே போல யூத அஞ்ஞான பாரம்பரியங்களைக் குறித்தும் பேசுகிறார். நியாயப்பிரமாணம் புதிய உடன்படிக்கைக்கு ஒரு முன்னோட்டம் மட்டுமே. (கலாத்தியர் 3:24, 25), அது வாழ்க்கையின் உயர்மட்ட ஆவிக்குரிய பொருளை வெளிப்படுத்துகிறது. புறஜாதிகளின் மனதால் அறியும் திறன்களெல்லாம் கிறிஸ்துவின் போதனைகளோடு ஒப்பிடும் போது அது மிகக் சாதாரணமானது. ஜீவனின் உயர்வான அணுகுமுறையையும் தேவனிடத்தில் எப்படி தனிப்பட்ட உறவுமுறையைக் கொண்டிருப்பது என்பதையும் அவர் போதித்தார். கிறிஸ்தவன் யூத அல்லது அஞ்ஞான வழிகளில் நடக்க முயற்சிப்பது ஒரு பல்கலைக்கழக படிப்பை விட்டு விட்டு ஒரு துவக்கப்பள்ளிக்கு சமமான கல்வியை நாடுவது போன்றது. இயேசுவின் உயர் போதனையை விடுத்து, ஆவிக்குரிய கல்வியறிவு இல்லாதவர்களையும், தவறான தகவல் பெற்ற போதனைகளையும், தொடக்க நிலை உபதேசங்களையும் எதிர்த்து பவுல் எச்சரித்தார்.*

***"கிறிஸ்துவைப் பற்றினதல்ல" (2:8)***

*இயேசுவை மட்டும் பின்பற்றிச்செல்ல வேண்டிய அவசியத்தின் அஸ்திபாரத்தை போட்ட பின்பு, "அவருக்குள் ஞானம் அறிவு என்பவைகளாகிய பொக்கிஷங்களெல்லாம் அடங்கியிருக்கிறது" (2:3) என்று எழுதினார். அவர் எதிர் மறையை முன்பு குறிப்பிட்டு பிறகு நேர்மறையை முன்வைத்தார். மனித ஞானத்தையும் செயல்பாடுகளையும் பின்பற்றுவதைப் பார்க்கிலும் இயேசுவுக்கு கீழ்ப்படியும்படி கொலோசெயருக்கு ஊக்கமளித்தார். அவர்களுக்கு தெரிவு செய்யும் வாய்ப்பு இருந்தது. அவர்கள் இயேசுவைப் பின்பற்றலாம் அல்லது வஞ்சிக்கிறதற்கேதுவான தத்துவத்திலும், வளர்ந்தேறாத யூகங்களிலும் வாழலாம், அவை கிறிஸ்துவினிடத்திலிருந்து வந்தவைகளல்ல. அவர்கள் இவைகளில் வாழ்ந்திருந்தால், அவர்கள் கிறிஸ்துவுடனான தங்கள் கூட்டுறவை முடித்துக் கொண்டு சிறைப்பட்டவர்களாக போகப்பட்டு, அவரிடத்திலிருந்து வருகிற ஆசீர்வாதங்களிலிருந்தும் கொள்ளைப் பொருளாக கொண்டுபோகப் பட்டிருப்பார்கள். பவுல் ஒரே ஒரு சரியான தெரிவைக் குறிப்பிட்டார் - மனிதனால் கண்டுபிடிக்கப்பட்ட எந்த ஆசரிப்புகளையும் கைக்கொள்வதைக் காட்டிலும் கிறிஸ்து மட்டுமே பின்பற்றப்பட வேண்டும். கிறிஸ்துவிடமிருந்து வராத உபதேசக் கோட்பாடுகளும், போதனைகளும், செய்கைகளும் பின்பற்றப்பட தேவனிடத்திலிருந்து ஒருவரும் அதிகாரம் பெறவில்லை.*

## கிறிஸ்துவுக்குள் வாசமாயிருக்கிற தேவத்துவம் *(2:9)*

***9ஏனென்றால் தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப்பிரகாரமாக அவருக்குள் வாசமாயிருக்கிறது.***

***“ஏனென்றால் தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப்பிரகாரமாக அவருக்குள் வாசமாயிருக்கிறது” (2:9)***

வசனங்கள் 1:15-19லும் 2:3லும் அறிமுகப்படுத்தப்பட்ட வாக்கியங்களுடன் வசனம் 8, 9 சேர்க்கப்படுகிறது. கொலோசெயர்கள் இயேசுவின் போதனைகளை கட்டுப்பாட்டுடன் சிந்தித்து செயல்படுவதன் முக்கியத்துவத்தை உணர்ந்திருக்க வேண்டும் என்பதை பவுல் உறுதிபடுத்திக் கொள்ள விரும்பினார்.

**ஏனென்றால்** என்று பயன்படுத்துவதால், **தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம்** என்பதை வசனம் 9ல் குறிப்பிடும் பவுல் அதை அதற்கு முந்தின சொற்றொடரான “கிறிஸ்துவைப் பற்றினதல்ல” என்பதுடன் இணைக்கிறார். மனித உபதேசத்துக்குப் பதிலாக, இயேசுவைப் பின்பற்றக் *காரணம்,* இயேசு யாராக இருக்கிறார் என்பதன் அடிப்படையைக் கொண்டது. அவர் தெய்வமாக இருப்பாரேயானால் மேலும் அவர் அனைத்து தெய்வீகக் குணாதிசயங்களையும் கொண்டிருப்பாரானால், பிறகு அவர் போதித்த அனைத்துமே உண்மையும் அதிகாரப்பூர்வமானதுமாகும். தேவன் பொய்சொல்வதில்லை (எபிரெயர் 6:18), எனவே அவருடைய போதனை உண்மையானது. இயேசு வெளிப்படுத்தின சத்தியத்துடன் ஒத்துப்போகாத எந்த போதனையும் உண்மையானதல்ல (1 யோவான் 2:21) மேலும் அது இயேசுவின் அதிகாரத்தின் பின்னனியிலிருந்து உந்தப்பட்டதல்ல.

1:19ல் குறிப்பிடப்படுகிற “பரிபூரணம்” என்ற வார்த்தை ஒருவேளை இந்த வசனத்துக்கு ஒப்பான வார்த்தையாக இல்லாமலிருக்கலாம். அங்கே சகல பரிபூரணமும் “கிறிஸ்துவுக்குள் வாசமாயிருக்கும்படி” (*katoikeō*) தேவன் செய்தார். என்று குறிப்பிட்டார் இந்த கடந்த கால முற்று வினை “வாசமாயிருக்கும்படி” என்று 1:19ல் மொழிபெயர்க்கப்பட்டுள்ளபடி விவாதிக்கப்படுகிற பரிபூரணம் எப்பொழுதும் கிறிஸ்துவுக்குள்ளாக வாசமாயிருக்க வில்லை என்பதையும், ஆனால் இந்தப் பரிபூரணம் ஒரு காலக் கட்டத்தில் அவருக்குள் வாசமாயிருக்க இடம் பெற்றது என்பதையும் சுட்டிக்காட்டுகிறது. அவர் மனுஷீகத்தில் வருவதற்குமுன், மனுஷ இரட்சகராக அவர் பூரணப்படாமலிருந்தார்.சிலுவையில் மரித்ததினால், அவர் பாவத்திற்கு நிவாரணமளிக்கத் தேவையான பலியை பூர்த்தி செய்தார் (எபிரெயர் 5:8, 9). அவருடைய வாழ்க்கை, போதனை, மரணம், ஆகியவற்றின் மூலமாக நம்முடைய அனைத்து ஆவிக்குரிய தேவைகளையும் சந்தித்ததால், அவர் மனித வர்க்கத்தின் பரிபூரண இரட்சகரானார். பரிபூரணமெல்லாம் அவருக்குள் வாசமாயிருக்கக்கூடும்படி இது செய்தது.

2:9ல் இயேசுவில் வாசம்பண்ணும் “தேவத்துவத்தின் பரிபூரணம்” பற்றி விவாதித்தார். அவர் உலகத்தில் வந்தபோது, உலகப்பிரகாரமான மாமிச சரீரத்தைப் அவதாரம் எடுக்க தமது பரலோகத்துக்குரிய சரீரத்தை விட்டு வந்தார்; ஆகிலும் அவர், இருந்த நபர்த்தத்துவத்தன்மை, மாறாத தெய்வீகம் நிறைந்ததாக இருந்தது. பவுல், அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்கு சமமாயிருப்பதை கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி அடிமையின் ரூபமெடுத்து, மனுஷ சாயலானார் (பிலிப்பியர் 2:6, 7), என்று சொன்னார். அவர் பூமியிலே வாசம் பண்ணிய காலத்தில், பூமிக்குரிய மனித மாமிச சரீரத்தை பெற்றிருந்த

போது, அவர் மாமிசத்தில் வந்த தெய்வமாயிருந்தார். இனியும் அவர் வானத்துக்குரிய பரலோக சரீரத்தையுடையவராயிராமல், பூமிக்கு சரீரத்தில் தெய்வீகமுடையவராயிருந்தார். அது பரலோகத்திற்குரிய சரீரத்தில் அவர் இருந்திருந்தாலும் சரி அல்லது பூமிக்குரிய சரீரத்தில் இருந்திருந்தாலும் சரி, ஒருபோதும் தெய்வீகத்திற்குக் குறைந்த தன்மை அவரிடத்தில் இருந்ததில்லை.

"தெய்வீகம்" (*theotētos*, என்பது *theotēs*) என்பதிலிருந்து வந்தது புதிய ஏற்பாட்டில் இங்கு மட்டுமே காணப்படுகிறது. சில மொழிபெயர்ப்புகளில் உலகப்பிரகாரமான பயன்பாட்டு வார்த்தையில் "தேவத்துவம்" என்று மொழிபெயர்த்துள்ளன (KJV; NKJV). தெய்வீகம் என்பதெல்லாம் - தெய்வீகத் தன்மையின் குணாதிசயங்களை ஒருங்கே பெற்றிருப்பது - அது இயேசுவில் காணப்பட்டது. அவர் பிதாவுக்கும் பரிசுத்த ஆவிக்கும் மேலாக உயர்ந்தவருமல்ல குறைந்தவருமல்ல, மாறாக, "தேவன்" என்ற வார்த்தையின் பொருளை உள்ளடக்கினவராய், வெளிப்படுத்தினவராய் சரியான அனைத்து சாயலையும் கொண்டவராயிருக்கிறார். இந்தக் கருத்து எபிரெயர் 1:3லும் முன்வைக்கப்பட்டுள்ளது, "இவர் அவருடைய மகிமையின் பிரகாசமும், அவருடைய தன்மையின் சொரூபமாயிருக்கிறார்."

இங்கே பயன்படுத்தப்பட்டுள்ள *thestes* என்பதற்கும் ரோமர் 1:20 ல் சொல்லப்பட்ட *theotēs* என்ற பதத்திற்கும் ஒரு மிக முக்கியமான வித்தியாசம் காணப்படுகிறது. Herbert M. Carson விளக்கமளித்ததாவது.

> இப்படியாக பவுல் ரோமரில் (1:20ல்) இயற்கையின் மகிமை தேவனுடைய மகத்துவத்தையும் வல்லமையையும் அறிவிக்கிறது. இருந்தும் அவர் இயற்கை தேவனை ஒரு நபராகக் குறிப்பிடாமல் அவர் தம்மை கிறிஸ்துவுக்குள் வெளிப்படுத்தினதாகக் குறிப்பிட்டார். ஆகிலும் இங்கே (கொலோசெயர் 2:9ல்) அவர் தேவத்துவத்தின் குணாதிசயங்களெல்லாம் கிறிஸ்துவுக்குள் வாசம்பண்ணுகிறதை மாத்திரம் குறிப்பிடவில்லை. மாறாக அவர் கிறிஸ்துவுக்குள் தேவத்துவத்தின் மாறாத இயற்கைத் தன்மையே அவருக்குள் வாசம்பண்ணுவதைக் குறிப்பிட்டார், எனவே அவர் *theotes* எனும் பதத்தையே பயன்படுத்தினார், அதன் மூலம் மாறாத இயற்கைத் தன்மையின் தேவத்துவம் எனும் கருத்து கொடுக்கப்பட்டது.[8]

தேவத்துவத்தின் பரிபூரணம் கிறிஸ்துவுக்குள் **வாசமாயிருக்கிறது** (*katoikeō*) என்று சொல்லுவதன் மூலம், பவுல் நிகழ்கால நிகழ்ச்சியாக வார்த்தைகளை பயன்படுத்தி கடந்த காலத்தில் வாசம் பண்ணியது, இப்பொழுது அவரில் பண்ணுகிறது, தொடர்ந்து இயேசுவுக்குள் வாசம் பண்ணும் என்று ஒரு தொடர் நிகழ்வாக ஒரு உண்மை நிகழ்வாகக் குறிப்பிட்டார். இவ்வுலகில் நடந்து திரிந்த அதே இயேசுவே தெய்வீகத்தின் முழு சத்துவமாயும், பரத்துவத்தின் அடக்கமாகவும் இப்போது பரலோகத்தில் இருக்கிறார். பவுலின் இந்த வாக்கியம் மறைபொருள் ஞானிகளின் கூற்றாகிய ஒரு ஆவி/நெடுங்கால ஜீவன் கிறிஸ்து மனுஷனாகி இயேசுவின் மேல் ஞானஸ்நானத்தின்போது வந்தார் சிலுவையிலே அவரை விட்டு விலகினார், என்பதற்கு பதிலாக அமைந்துள்ளது.

இயேசுவுக்குள் பரிபூரணம் என்பது அவர் பேசியபோதும் போதித்த போதும், அவர் தேவனுடைய மனதை வெளிப்படுத்தினார் என்று பொருள்.

அவர் சொன்னார்,

> நான் சுயமாய்ப் பேசவில்லை, நான் பேசவேண்டியது இன்னதென்றும் உபதேசிக்கவேண்டியது இன்னதென்றும் என்னை அனுப்பின பிதாவே எனக்குக் கட்டளையிட்டார். அவருடைய கட்டளை நித்திய ஜீவனாயிருக்கிறதென்று அறிவேன்; ஆகையால் நான் பேசுகிறவைகளைப் பிதா எனக்கு சொன்னபடியே பேசுகிறேன் என்றார் (யோவான் 12:49, 50).

இயேசு மூலமாக பிதாதாமே அறிந்திருக்க வேண்டியவைகளை வெளிப்படுத்தி, மனித வர்க்கத்திற்கு ஒரு முழுமையான வெளிப்பாட்டுக் கருவியாக அவரைப் பயன்படுத்தினார் (எபிரெயர் 1:1, 2).

சிருஷ்டிக்கப்பட்ட இந்தப் பிரபஞ்சம் - அதின் பூதாகரமான உருவ அமைப்பும் பலமிக்க வானுலக ராசிகளும், பூமியில் காணப்படுகிற ஜீவராசிகளின் அமைப்பும் கூட - தேவனுடைய மாபெரும் மனதையும் வல்லமையையும் அறிவிக்கின்றன (சங்கீதம் 19:1; ரோமர் 1:20). எப்படியிருப்பினும், இயற்கை தேவனை வெளிப்படுத்த முடியாதவைகளை அவர் (குமாரன்) பிதாவினுடைய முழுமையானத் தன்மையை தம்முடைய பூர்வீகமுதல் கொண்டிருந்ததால் இயேசு அறியப்பண்ணினார் (யோவான் 1:18; 14:9).

**சரீரப்பிரகாரமாக,** என்று பவுல் சொன்னபடியால், அது சபையைக் குறிப்பதாக சிலர் முடிவு பண்ணினார்கள், ஏனெனில் சபை “சரீரம்” (*sōma*) என்று அழைக்கப்படுகிறது (1:18). இது சரியான அர்த்தமாக இருக்கக் கூடுமா என்று கூறுவது கடினமே. தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சபையிலே வாசம் பண்ணுவதில்லை, சபை “கிறிஸ்துவின் நிறைவானது” என்று சொல்லப்பட்டிருந்த போதிலும் இது பொருந்தாது (எபேசியர் 1:23). பவுல் சபையைக் குறிப்பிட்டுச் சொல்லியிருந்தால், அவர் “சரீரத்தில்” என்று எழுதியிருக்க வேண்டும் “சரீரப்பிரகாரமாக” என்று எழுதியிருக்க வேண்டுவதில்லை.

வேறு சிலர் பவுல் “நிழலாக” அல்லது “ஒப்பானதாக” (*sōma*) என்ற வார்த்தையை 2:17ல் சொல்லப்பட்டபடி பொருள்படுத்தி எழுதியிருக்கக் கூடும் என்று தர்க்கிக்கின்றனர். இயேசுவின் சரீரத்தில் வாசம் பண்ணுவதைக் குறிப்பதாகவே காணுகிறது. அதாவது இயேசுவின் தெய்வீகம் அவருக்குள் வாசம் பண்ணுவதை அது குறிக்கிறது. இது மாம்சரீதியில் சாத்தியமல்ல, ஏனெனில் தேவன் ஆவியாயிருக்கிறார் (யோவான் 4:24), மாமிச சாயல் அவரிடத்தில் இல்லை. இயேசு, தம்முடைய உண்மையான தன்மையில், தேவனிடத்திலிருக்கும் சகல குணாதிசயங்களையும் கொண்டிருந்தார். அவருக்குள்ளாகத்தான் முழுமையான தெய்வீகத்தின் உண்மைத்தன்மைக் காணப்பட்டது (எபிரெயர் 1:3).

---

குறிப்புகள்

[1]*Blepete* “காண்க” என்னும் வார்த்தை எச்சரிக்கைக்காகவும் பயன்படுத்தப்படலாம் (காண்க மத்தேயு 24:4; மாற்கு 4:24; 8:15; 12:38; 13:5, 9, 23 33; நடபடிகள் 13:40; கலாத்தியர் 5:15; பிலிப்பியர் 3:2; எபிரெயர் 3:12).

[2]Walter Bauer, *A Greek-English Lexicon of the New Testament and Other Early Christian Literature,* 3d ed., rev. and ed. Frederick William Danker (Chicago: University of Chicago Press, 2000), 955. [3]A. T. Robertson, *Paul and the Intellectuals: The Epistle to the Colossians,* rev. and ed. W. C. Strickland (Nashville: Broadman Press, 1959), 77. [4]Clement of Alexandria *Stromata* 1.11; 6.8. [5]Philo *The Posterity and Exile of Cain* 101. [6]The Greek word translated "deception" also appears in Matthew 13:22; Mark 4:19; Ephesians 4:22; 2 Thessalonians 2:10; Hebrews 3:13; 2 Peter 2:13. [7]David M. Hay, *Colossians,* Abingdon New Testament Commentaries (Nashville: Abingdon Press, 2000), 87–88. [8]Herbert M. Carson, *The Epistles of Paul to the Colossians and Philemon: An Introduction and Commentary,* The Tyndale New Testament Commentaries (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1960), 63–64.